18th August 1960]

செய்து அதை மாற்றி பிரசாரத் துறை போன்ற மற்ற செயல் முறையில் அந்தப் பணத்தைச் செலவழிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லாம், ஒரு காரியத்தால் மட்டும் இதில் வெற்றி அடைய முடியாது. வெவ்வேறு முயற்சி எடுக்க வேண்டியதாகயிருக்கிறது. இந்த முயற்சியும் சிறிதளவு பலன் அளிக்கும் என்ற முடிவிற்கு வந்து இதை ஏற்பாடு செய்திருக்கிறுர்கள்.

SRI A. GOVINDASAMY : இந்த சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்படுமா ? அல்லது அரசாங்கக் காரியாலயங்களில் மட்டும் ஒட்டப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொது இடங்களிலும் ஒட்டப்படும்.

SRI T. S. RAMASWAMI : Sir, there are places in our State where untouchability is past history and where these posters will only remind ancient history and it is almost an anachronism. So, will the Government think of not pasting these posters in those areas?

THE HON. SRI C. SUBRAMANIAM : Posters will be prepared in such a way that they will not remind them of the past, but will give hope for the future.

SRI P. G. MANICKAM : தீண்டாமைக் கொடுமைகளை சினிமா மூலம் விளக்குவதற்கு சர்க்காருக்குத் திட்டமிருப்பின் அதன் விவரங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சினிமா எடுக்கிறதாக இப்பொழுது உத்தேசமில்லை. ஆனுல் ட்ராமாக்கள் மூலம் இதைப் பரப்புவதாக உத்தேசம்.

SRI A. GOVINDASAMY : இதுவரையில் அடித்த சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்டாததின் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொது இடம் என்ருல் எது என்று தெரியவில்லை "பப்ளிக்" போகிற இடங்களில்தான் இதை ஒட்டியிருக்கிறது.

Electrification of Taluk offices

* 274 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1960-61-ல் தாலூகாக்களிலுள்ள எத்தனை காரியாலயங்களிலே மின்சார விளக்குகள் போட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிக்கிறது ?

[18th August 1960

THE HON. SRI P. KAKKAN : It is proposed to electrify 14 (fourteen) Government offices during 1960–61 and a sum of Rupees 19,821 has been allotted for the purpose. The question of electrifying all Taluk and Revenue Divisional Officers' offices during the course of this year is also under consideration.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட 14 இடங்கள், எந்தெந்த இடங்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : Taluk Office and Deputy Tahsildar's Office, Gingee; Taluk Office, Villupuram; Deputy Tahsildar's Office and Police Station at Kodavasal; Taluk Office, Sub-Jail and Sub-Magistrate's Court, Musiri; verandah of Public Office at Pudukottai; Taluk Office at Aruppukottai; Taluk Office at Mudukulathur; Taluk Office, Sub-Jail and Sub-Magistrate's Court Buildings at Gobichettipalayam; Section Office, Trivellore; Government Basic Training School, Tirur; Forest Range Office, Chengam; Court-hall and Chamber of Sub-Magistrate at Arni; Office of the Deputy Inspector of Schools, Arni; and the Bar Room of the Sub-Magistrate's Court at Ambur.

SRI P. G. MANICKAM : ஸார், இதர தாலூகா ஆபிஸ்களிலும், டெப்யூடி கலெக்டர் ஆபிஸ்களிலும், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆபிஸ்களிலும் இவ்வாறு லைட் போடுவதற்காக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இந்தப் பரிசீலனை முடிந்த பின்னால் இந்த வேலைகளை எல்லாம் செய்வதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படுமா இல்லையா என்பதற்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை. என்னுடைய பதிலில் சொன்னபடி எங்கெங்கு எல்லாம் மின்சார லைட் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறதோ அங்கெல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI S. RANGANATHA MUDALIAR : Is there any proposal for electrifying subordinate judicial courts, I mean the Judicial Magistrate's Courts?

THE HON. SRI P. KAKKAN : அவசியம் இருக்கிற இடங்களில் எல்லாம் போடுவது பற்றி கவனிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : சென்னை நகரத்திலும், சென்னை நகர வட்டாரத்தில் பொதுவாக எல்லா அலுவலகங்களிலும் மின்சாரம் வந்தும்கூட சைதாப்பேட்டையிலுள்ள தாலூகா ஆபிஸில் இதுவரை மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக ஒரே கட்டிடத்தில் கீழ் பாகத்தில் இருக்கும் தாலூகா ஆபிசுக்கு லைட் கொடுக்கவில்லை, அதே கட்டிடத்தின் மாடியில் இருக்கின்ற மாஜிஸ்ட்ரேட்-கோர்ட்டுக்கு மின்சார லைட் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கீழே இருக்கும் தாலூகா ஆபிசுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று கடந்த 10 வருடகாலமாகக் கேட்டி

18th August 1960]

ருந்தும் இதுவரை கொடுக்கப்படாததின் காரணம் என்ன? ஆகவே இதை உடனடியாகக் கவனிக்க அரசாங்கம் முன் வருமா? . . .

MR. SPEAKER: The hon. Member may write to the Hon. Minister. He cannot put a question like that.

SRI K. VINAYAKAM: On a point of Order, Sir. The Hon. Minister was pleased to read out a list of places which have been electrified and I am only listing out a place, arising out of the reply given by the Hon. Minister, i.e., the taluk office in Saidapet where the upstairs has been electrified and not the downstairs wherein the taluk office is situated. My question cannot be out of order.

MR. SPEAKER: It is for me to decide. The hon. Member has not listened to what I have said just before. The supplementary question must be based on the answer given by the Hon. Minister to the main question. But, instead of that, if any hon. Member puts a question as to why certain buildings in his constituency have not been electrified, the Minister concerned may not have the answer ready. I must come to the rescue of the Minister. The supplementaries must come within the purview of the main question. The hon. Member may put a separate question whether such and such a building in Saidapet has been electrified or not. I shall allow it. He cannot put a question for which the Minister may not have a ready answer. I am sorry to say that.

Housing facilities for Government Employees.

* 275. *Q.*—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) Public Works Department மூலமாகவும் City Improvement Trust மூலமாகவும் அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக எவ்வளவு தொகை தேவை என்று மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்காரால் தெரிவிக்கப் பட்டது?

(ஆ) எவ்வளவு தொகை மத்திய சர்க்காரால் கொடுக்கப் பட்டது?

(இ) Public Works Department மூலமாகவும் City Improvement Trust மூலமாகவும் 1960-61-ஆம் வருடத்தில் எத்தனை வீடுகள் எங்கெங்கே கட்டப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The Government of India were informed that our requirements under the Rental Housing Scheme will be Rs. 30 lakhs for 1959–60, and Rs. 50 lakhs for 1960–61.